## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கொழும்பு பெரிய பள்ளிவாசல் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986, ஆகஸ்ட் மாதம் 21 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, ஆகஸ்ட் மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 75*

**1986 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கொழும்பு பெரிய பள்ளிவாசல் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[1986, ஆகஸ்ட் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ஓ.வ.—பீ 30/84
1661

## கொழும்பு பெரிய பள்ளிவாசலினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கொழும்பு பெரிய பள்ளிவாசல் எனப் பொதுவாக அறியப்படும் இஸ்லாமிய புனித வணக்கத்தலமொன்று நானூற்றைம்பது வருடங்களுக்கு மேலாகக் கொழும்பு நகரத்தில் அமைந்திருந்துள்ளதாதலாலும் — முன்னுரை.

அத்துடன் அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, கொழும்பு பெரிய பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமெனக் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கழகம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டு நடாத்தியுள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கொழும்பு பெரிய பள்ளிவாசல் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் " பள்ளிவாசல் " எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கொழும்பு பெரிய பள்ளிவாசலின் உறுப்பினர்களாகத் தற்போது உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கொழும்பு பெரிய பள்ளிவாசல்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறுவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன், அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அவர்கள்விருப்பப்படி அவ்விலச்சினையை மாற்றியமைக்கவும், முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருக்கும். — கொழும்பு பெரிய பள்ளிவாசலினை கூட்டிணைத்தல்

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிகோள்கள்.

3. கூட்டுத்தாபனத்தின் பொதுக்குறிக்கோள்கள் பின்வருவன வாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:—

(அ) இப்பள்ளிவாசலினை முஸ்லீம்களின் புனிதத் தலமாகவும், கலாசார நிலையமாகவும், கழகமாகவும் கட்டியெழுப்புதல், புனரமைத்தல், தாபரித்தல், அத்துடன் நடாத்துதல்;

(ஆ) முஸ்லீம் பள்ளிவாசலினைச்சார்ந்த புண்ணிய தலங்களை யும் மையவாடிகளையும் புனரமைத்தல், தாபரித்தல், அத்துடன் நடாத்துதல் ;

(இ) கல்வியை முன்னேற்றுவதற்காக இதுவரை இத்தால் வழங்கப்பட்ட அவசியமான வசதிகளுக்கும் மற்றெல்லா விடயங்களுக்கும் ஏற்பாடு செய்தல் ;

(ஈ) வறியோர்கள், அனாதைகள், ஏழைகள், நோயாளிகள் ஆகி யவர்களுக்கு உணவு, உடை, மருத்துவ உதவிகள், ஆகியவற்றினை வழங்குவதன்மூலம், பசிப்பிணி, நோய் நொடிகள் ஆகியன, சம்பந்தமாக நிவாரணமளித்தல் ;

(உ) "ஸகாத் ஸதகாத் என்பவற்றோடு தன்னிச்சையான பகிரங் கத் தருமங்களைச் சேகரித்தலும் விநியோகித்தலும்; அத் துடன்

(ஊ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அல்லது அவற்றில் எதையும் எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செய்கைகளையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

கூட்டுத்தாபனத் தின் அலுவல்களை முகாமைசெய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலு வுள்ளனவாயிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க, அப்போதைக்கு வலுவுள்ளனவாயிருக்கும் விதிகளின் கீழ் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் நாளில் பதவி வகிக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையாக அமைதல் வேண்டும்.

ஆதனங்களின் கட்டுக் காப்பு.

5. கூட்டுத்தாபனத்தின் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனங்களின் கட்டுக்காப்பு அப்போதைக்கு வலுவுள்ளனவாயி ருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத் தாபனத் தின் விதிகள்.

6. (1) கூட்டுத்தாபனமானது, ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அல்லது அந்நோக்கத்துக்கெனச் சிறப்பாகக் கூட்டப்பட்ட ஏதே னும் கூட்டத்தில், அத்தகைய கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையா தோரைக்கொண்ட பெரும்பான்மை மூலம், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றிற்குமாக அல்லது அவற்றில் எதற்குமாக உசிதமான தெனக் கருதக்கூடியவாறான, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாயிராத அத்தகைய விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், நீக்கம் செய்தல், அல்லது வெளியேற்றுதல் ;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு அலுவல்களினதும், முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும், நடத்தைகளும், கடமைகளும்;

(இ) கூட்டுத்தாபனக் கூட்டங்களின் போதும் அலுவல்களைக் கொண்டு நடாத்தும் போதும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிருவாகமும் முகாமையும் ;

(உ) உறுப்பினர்களினால் செலுத்தப்படவேண்டிய சந்தாப் பணம் பற்றித்தீர்மானித்தலும் அச்சந்தாப்பணத்தைச் சேகரித்தலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைப்படுத்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளுதலும்.

(2) அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டவிடத்து, அதேபோன்ற கூட்டமொன்றிலும், அதேமுறையிலும் (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம், அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப் படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும், அத்தகைய மாற்றுதல், திருத்துதல், அல்லது நீக்குதல் சம்பந்தமாக ஆகக்குறைந்தது பதினைந்து நாட்களைக் கொண்ட முன் அறிவித்தல் மூலமாக அதன் உறுப்பினர்களுக்கு அறிவிக்காது, மாற்றப்படுதல், திருத்தப்படுதல் அல்லது நீக்கப்படுதல் ஆகாது.

*பள்ளிவாசலினால் செலுத்தப்பட வேண்டிய அல்லது பள்ளிவாசலுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன்கள்.*

7. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பள்ளிவாசலின் எல்லாத்தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பள்ளிவாசலுக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான எல்லா உதவுதொகைகளும், சந்தாப் பணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள் மூவரின் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம், அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**9.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனத்தை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள அத்தகைய விதிகளுக்கமையவும் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும்ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாதலோ பாதிப்பதாதலோ ஆகாது.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்,*